**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.192/2024**

**தேதி : 19.06.2026**

**(வா.சா.2 ) – திரு. மைக்கேல்ராஜ்**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (பிரதிவாதி தரப்பில்)**

1. நான் ஆசிரியராக வேலை பார்க்கிறேன். அரசு பள்ளியில் ஆசிரியராக உள்ளேன். 6 முதல் 10ம் வகுப்பு ஆசிரியராக உள்ளேன். பழனியில் வேலை பார்க்கிறேன். வாதி சிவலிங்கத்தை எனக்கு 10 ஆண்டுகளாக தெரியும். சிவலிங்கம் அரிசி வியாபாரம் செய்கிறார். வாதி பழனி புது நகரில் குடியிருக்கிறார். நான் பாண்டியன் நகரில் குடியிருக்கிறேன். 2002ல் இருந்து நான் அங்கு குடியிருக்கிறேன். வாதியி மட்டும்தான் எனக்கு தெரியும். அவரது குடும்பத்தினரைப் பற்றி தெரியாது. 29.01.2023ம் தேதி வாதி பிரதிவாதிக்கு மாலை சுமார் 6.00 மணிக்கு ரூ.1,00,000/– பணம் கடனாகக் கொடுத்தார். அப்போது எனக்கு பள்ளியில் வேலை நேரம் முடிந்துவிட்டது.

2. பிரதிவாதியை எனக்கு நன்கு தெரியும். பிரதிவாதி தொப்பம்பட்டி அரசு பள்ளியில் வேலை பார்க்கிறார். பிரதிவாதியின் மனைவியையும் எனக்குத் தெரியும். அவரும் ஆசிரியராக உள்ளார். அவர் பொருளூர் அரசு பள்ளியில் ஆசிரியராக வேலை பார்க்கிறார். 6ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பாடம் எடுக்கிறார். அவரது பெயர் ஜமீராபானு. வாதி தனது சாட்சியத்தில் பிரதிவாதிக்கு காலை 11.00 மணிக்கு பணம் கொடுத்ததாக கூறியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. மாலை 6.00 மணிக்குத்தான் பிரதிவாதிக்கு வாதி பணம் கொடுத்தார். அந்த சமயத்தில் பகல் நேரத்தில் நான் பள்ளியில் வேலை பார்த்து வந்தேன்.

3. வாதிக்கு இந்த வழக்கு தவிர வேறு வழக்குகள் உள்ள விபரம் எனக்கு தெரியாது. எனக்கு முகமது சித்திக் அன்சாரி என்பவரை தெரியாது. பிரதிவாதி முகமது சித்திக் அன்சாரியுடன் 09.07.2023ல் சென்று வாதியிடம் பணத்தை திருப்பிக் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி பணம் கடனாக பெற்றபோது பிரதிவாதியின் மனைவியும் அங்கு இருந்து சாட்சிக் கையெழுத்து

**போட்டுள்ளார். கடனுறுதிச் சீட்டில் இரண்டாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். முதலாவது சாட்சி கையெழுத்தை பிரதிவாதியின் மனைவி போட்டார். என் கண் முன்பு போட்டார். வாதி, பிரதிவாதியிடம் பணம் கொடுத்த தேதியில் முதலாவதாக சாட்சி கையொப்பம் செய்துள்ள பிரதிவாதியின் மனைவி அங்கு வரவில்லை என்றும், சாட்சிக் கையொப்பம் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.**

**4. பிரதிவாதியின் மனைவியின் சாட்சி கையெழுத்தை ஆய்வுக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபணை இல்லை. வழக்கிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை</u> :– இல்லை.**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

RAJA B Digitally signed by RAJA B Date: 2026.06.19 15:58:26 +0530

Additional Sub Judge,
Palani.